அடைக்கலம் தந்த வீடுகளே
போய் வருகின்றோம் நன்றி 2 –
நெஞ்சை அடைக்கும் துயர் சுமந்து செல்கின்றோம் -உங்கள்
அன்புக்கு புலிகள் நன்றி

நாங்கள் தேடப்படும் காலத்தில் நீங்கள் கதவு திறந்தீர்களே 2 –
எம்மை தாங்கினால் வரும் ஆபத்தை எண்ணி
பார்க்க மறந்தீர்களே பார்க்க மறந்தீர்களே...பார்க்க மறந்தீர்களே..

அடைக்கலம் தந்த வீடுகளே
போய் வருகின்றோம் நன்றி 2

எங்கள் உடல்களில் ஓடும் செங்குருதி
உங்கள் சோறல்லவா உங்கள் சோறல்லவா 2-
நாங்கள் தங்கியிருந்த நாள் சிலநாள் என்றாலும்
நினைவு நூறல்லவா நினைவு நூறல்லவா...நினைவு நூறல்லவா...

அடைக்கலம் தந்த வீடுகளே
போய் வருகின்றோம் நன்றி 2

பெற்றோரை உறவை பிரிந்திருந்தோம் -அந்த
இடைத்தை நிறைத்தீர்களே 2 –
மாற்றான் முற்றுகை நடுவில் மூடியெமையுங்கள்
சிறகால் மறைத்தீர்களே சிறகால் மறைத்தீர்களே...சிறகால் மறைத்தீர்களே

அடைக்கலம் தந்த வீடுகளே
போய் வருகின்றோம் நன்றி 2 –
நெஞ்சை அடைக்கும் துயர் சுமந்து செல்கின்றோம் -உங்கள்
அன்புக்கு புலிகள் நன்றி